# திருவரங்கச்சோலை

(கோயில் வித்$_3$வான் ஸ்ரீ உ.வே.நரஸிம்ஹாசார்யஸ்வாமி)

**வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை**
**கொண்டமீதணவும் சோலை குயிலினம் கூவும் சோலை (திருமாலை.14)**

இப்பாசுரத்தில் கண்டுள்ள வண்டு, மயில், மேக$_4$ம், குயில் போன்ற பத$_3$ங்கள் மாமுனிகளையும் அரங்கனையும் குறிப்பனவாக அமைந்துள்ளன.

**வண்டினம் முரலும் சோலை**

1. நம்மாழ்வார் எம்பெருமானை வண்டாகக் கொண்டார். ''தூவியம் புள்ளுடைத் தெய்வவண்டு'' என்பது அவர் திருவாக்கு.
2. மலர்கள் வண்டுகளின் வரவை எதிர்பார்த்து வாசனையை திசைதோறும் வீசிநிற்கும். அதுபோலே, ஆழ்வாரும் ஆர்வுற்றிருக்க அவரின் முன்னம் பாரித்து, தான் அவரை முற்றப்பருகினான்.
3. ஆறு கால்களைப்பெற்றுள்ள வண்டுகளுக்கு ''ஷட்பத$_3$:'' என்று பெயர். ப$_4$க$_3$வச்ச$_2$ப்$_3$த$_3$வாச்யனான எம்பெருமானிடத்திலும் 'ப$_4$க$_3$:' என்று சொல்லப்பட்ட ஆறு அரும்பண்புகள் உள்ளன. அவையாவன—

(அ) ஞானம் — எப்பொழுதும் எல்லா வஸ்துக்களையும் ஒரே ஸமயத்தில் தானாகவே உள்ளபடி அறிதல்.

(ஆ) ப$_3$லம் — ஸங்கல்பமாத்ரத்தாலே ஸர்வபத$_3$ார்த்த$_2$ங்களையும் ஶ்ரமமின்றி த$_4$ரிக்கும் ஆற்றல்.

(இ) ஐஶ்வர்யம் — ஸர்வபத$_3$ார்த்த$_2$நியமநஸாமர்த்$_2$யம்.

(ஈ) வீர்யம் — ஜக$_3$த்துக்கு உபாத$_3$ானகாரணமாய் இருக்கச்செய்தேயும் அவிகாரனாயிருக்கை.

(உ) ஶக்தி — அக$_4$டிதக$_4$டநாஸாமர்த்$_2$யம்

(ஊ) தேஜஸ் — எதற்கும் ஸஹகாரியை அபேக்ஷியாதிருக்கை.

4. **லக்ஷ்மீ கல்பலதோத்துங்க$_3$ ஸ்தநஸ்தப$_3$கசஞ்சல: ।**
**ஸ்ரீரங்க$_3$ராஜப்$_4$ருங்கே$_3$ா மே ரமதாம் மாநஸாம்பு$_3$ஜே ॥ (ர,ஸ்த.1—10)**

திருமகளாம் கற்பகக் கொடியின் வாராளுமிளம் கொங்கையாம் பூங்கொத்தில் சுழன்றுவரும் அணிஅரங்கன் என்னும் மணிவண்டு அடியேன் உள்ளக்கமலத்து அமர்ந்து களித்திடுக.

**மாமுனிகள் வண்டு**

1. வண்டுகளுக்கு வடமொழியில் த்விரேப$_2$: என்று ஒரு பெயருண்டு. அதாவது இரண்டு 'ர' எழுத்துக்களைத் தன் பெயரில் கொண்டுள்ளது— ப்$_4$ரமர: என்பது. இதேபோல் வரவரமுனி என்ற பெயரிலும் இரண்டுரேப$_2$ம் உள்ளன.

2. மாமுனிகளை அடிபணிந்த சான்றோர் பலரும் பலவிடங்களிலும் இவரை வண்டு என்று கொண்டாடியுள்ளனர்.

**ப்ரதிவாதி3ப4யங்கரம் அண்ணாவின் வரவரமுநிஶதகம்.**

**ராமாநுஜார்யசரணாம்பு3ஜசஞ்சரீகம்**
**ரம்யோபயந்த்ருயமிநம் ஶரணம் ப்ரபத்3யே ।।   (1)**

எம்பெருமானார் திருவடித்தாமரைகளில் பதிந்த வண்டாகிய மாமுனிகளை சரணமடைகிறேன்.

**மஹத3ாஹ்வயபாத3பத்3மயோ:**
**மஹது3த்தம்ஸிதயோர்மது4வ்ரதம்।   (43)**

மஹான்களின் ஶிரோபூ4ஷணமான பேயாழ்வார் திருவடித்தாமரைகளில் படிந்த வண்டாகிய மாமுனிகளை.

**ஶட2ாராதிஸ்ரீமத்3வத3நஸரஸீஜாதமிஹிர:**
**ததீ3யஸ்ரீபாத3ாம்பு3ஜமது4கர: தஸ்ய வசஸாம்।। (53)**

மாமுனிகள் நம்மாழ்வார் திருவடித்தாமரைகளில் படிந்தவண்டு.

**தமநுதி3நம் யதீந்த்3ரபத3பங்கஜப்4ருங்க3வரம்**
**வரமுநிமாஶ்ரயாஶய விஹாய தத3ந்யருசிம் ।। (85)**

எம்பெருமானார் திருவடித்தாமரைகளில் படிந்த வண்டாகிய மாமுனிகளை நெஞ்சே ஆஶ்ரயி.

ஆழ்வார் புட்பாகனிடம் தூதுநல்கிவிடும் புள்ளினங்களுக்கு உள்பொருள் அருளிச்செய்துள்ளார் அழகியமணவாளப்பெருமாள் நாயனார்

''என்பெறுதி என்ன ப்4ரமியாது உள்ளத்து ஊறிய மது4வ்ரதமாய் தூமதுவாய்கள் கொண்டு குழல்வாய் வகுளத்தின் ஸாரம் க்3ரஹித்து''(ஆ.ஹ் 152)

வண்டுகள் வகுளம் முதலிய மலர்களின் ஸாரமாம் தேனைப் பருகுதல் இயல்பே. அதுபோன்று மாமுனிகளும் வகுளாப4ரணரான நம்மாழ்வார்தம் சொல் மாலையின் ஸாரத்தை க்3ரஹித்தவர். திருவாய்மொழியின் ஸாரமான திருவாய்மொழி நூற்றந்தாதி அருளிச்செய்தமையின் இது இனிது உணரப்படும். ''மன்னிய சீர் மாறன் கலை உணவாகப் பெற்றோம்' என்று மாமுனிகள் தாமே அருளிச்செய்துள்ளார்.

**மயிலினம் ஆலும் சோலை**

**ப்ரலயஸமயஸுப்தம் ஸ்வம் ஶரீரைகதே3ஶம்**
**வரத3! சித3சித3ாக்2யம் ஸ்வேச்ச2யா விஸ்த்ருணாந: ।**
**க2சிதமிவ கலாபம் சித்ரமாதத்ய தூ4ந்வந்**
**அநுஶிகி2நி ஶிகீ2வ க்ரீட3ஸி ஸ்ரீஸமக்ஷம் ।। (ர.ஸ்த..2–44)**

பேரருளாள! தோகை விரிக்கின்ற பொறியார் மஞ்ஞை,பேடை மயில் முன் அணிமாநடம்பயின்றுடுவது போன்று, ஊழிக்காலத்து உறக்கம் கொண்டவை போல் நின் திருவுடம்பில் ஒருகூறாய் ஒன்றிநின்ற திரிவனவும் நிற்பனவுமாவமவற்றை

மழுங்காத ஞானத்தினால் பல்வகைப்பெருவிறல் உலகமாய்ப் பரப்பி திருமடந்தை முன்பே நீ விளையாடுதி.

கருவிலே திருவுடைய ஸ்ரீபராஶரப$_4$ட்டர் அரங்கமேய மாயனை தோகைமாமயிலாக உருவகப்படுத்தியுள்ளார்

மயில் தன் உடலில் அடங்கிய கலாபத்தை விரிப்பது போன்று மாமுனிகளும் தமது திருவுள்ளத்தில் கிடந்த கலைகளை வ்யாக்$_2$யாநம் அருளும்போது விரித்துச் சிறந்தனர். மயில்கள் ஆலித்தல், அழைத்தல் போன்று மாமுனிகளும் முகில்வண்ணனை கண்ணாரக்கண்டுகொண்டு ஆட்டமேவி அலந்தழைத்து அயர்வெய்திய மெய்யடியாராவார்.

**அந்தஸ்வாந்தம் கமபி மது$_4$ரம் மந்த்ரமாவர்தயந்தீம்**
**உத்$_3$யத்$_3$ப$_3$ாஷ்பஸ்திமிதநயநாம் உஜ்ஜிதாஶேஷவ்ருத்திம் |**
**வ்யாக்$_2$யாக$_3$ர்ப$_4$ம் வரவரமுநே! த்வந்முக$_2$ம் வீக்ஷமாணம்**
**கோணே லீந: க்வசிதணுரஸௌ ஸம்ஸத$_3$ம் தாமுபாஸ்தாம் ||**
**(எறும்பியப்பாவின் வரவரமுநி ஶதகம் 46)**

மனத்துக்குள் ஏதோ ஒரு இனிய மந்த்ரத்தை உருச்செய்வதும், கண்ணீர்ப் பெருக்கால் நிலைத்து நின்ற கண்களை உடையதும், எல்லாத்தொழில்களையும் விட்டதாயுள்ள மாமுனிகளே! வ்யாக்$_2$யாநம் அருளிச்செய்யும் தேவரீருடைய முக$_2$த்தை வைத்தகண்வாங்காது பார்க்கும் கோ$_3$ஷ்டி$_2$யை ஒருமூலையில் மறைந்து நின்று இச்சிறியேன் அநுப$_4$விக்கட்டும்.

**கொண்டல்மீதணவும் சோலை**

கண்டவர்சிந்தை கவரும் கடிபொழில் தென்னரங்கனைக் கொண்டல் என்று கொண்டாடுகிறார் ஸ்ரீபராஶரப$_4$ட்டர்.

**ஸிஞ்சேதி$_3$மஞ்ச ஜநம் இந்தி$_3$ரயா தடித்வான்**
**பூ$_4$ஷாமணித்$_3$யுதிபி$_4$ரிந்த்$_3$ரத$_4$நுர்த$_3$த$_4$ாந: |**
**ஸ்ரீரங்க$_3$த$_4$ாமநி த$_3$யாரஸநிர்ப$_4$ரத்வாத்$_3$**
**அத்$_3$ரௌ ஶயாலுரிவ ஶீதலகாளமேக$_4$: || (ர.ஸ்த. 1–82)**

பூமன்னுமாதென்னும் மின்னிற்பொலிவதாய், இழைபலவற்றில் பதித்த பன்மணிகளின் ஒளியாகிற ககன வில் ஒன்று ஏந்தியதாய், நல்லருள் என்னும் நீர் நிரம்பப்பெற்றமையான் திருவரங்கப்பெருநகருள் வரைமேல் (அநந்தனென்னும் அணிவிளங்குமுயர் வெள்ளையணையைமேவி) பள்ளிகொள்ளுவதான குளிர்ந்துறைகின்ற கார்முகில் அடியேனையும் நனைத்தருள்க.

இதனை அடியொற்றி தி$_3$வ்யகவி பிள்ளைப்பெருமாள்ஐயங்கார்

**காவிரிவாய்ப் பாம்பணைமேல் கருமுகில் போல் கண்வளரும் கருணைவள்ளல்**
**பூவிரியும் துழாயரங்கர் பொன்னடியே தஞ்சமெனப் பொருந்தி வாழ்வார்**
**யாவரினும் இழிகுலத்தோராலுைம் அவர் கண்டீர் இமையா நாட்டத்**
**தேவரினும் முனிவரினும் சிவன் அயன் என்ற இருவரினும் சீரியோரே.**
**(திருவரங்கக் கலம்பகம் 100)**

**தம் ப்ரபந்நஜநசாதகாம்பு$_3$த$_3$ம்**

என்று மாமுனிகளையும் முகிலெனவே போற்றினர் பெரியோர். கைம்மாறு கருதாது மழை பொழிந்து உலகினை உய்விக்கும் முகில், வண்மையில் சிறந்தது தானே.

**குயிலினம் கூவும்சோலை**

கயல்துளு காவிரி சூழ் அரங்கனைக் குயில் என்றது நிற ஒற்றுமை ஒன்றினால் அன்று. குயிலுக்கு வடமொழியில் 'வநப்ரிய:' என்று ஒரு பெயர் உண்டு. சோலையில் விருப்புடையது என்று இதற்குப்பொருள். அரங்கனும் வநப்ரியனே ஆவான், ''ஆராமம் சூழ்ந்த அரங்கத்தில்'' இருப்பதால்.

குயில் மா (மரம்) ஏறி மிழற்றும் இயல்புடைத்தாதலின் 'மா' வினிடத்தில் அதற்குள்ள பெருவிருப்பு உணரப்படும். அரங்கனோ எனில் ''அல்லி மலர் மகள் போக மயக்குக்களாகியும் நிற்கும் அம்மான்'' என்றபடியே ''மா''வினிடத்து (திருமகளிடத்து) பேரன்புடையவன்.

குயில் பஞ்சமஸ்வரத்தில் இனிமையாகப் பாடவல்லது. 'ப$_4$ாரதப்$_2$பஞ்சமோ வேத$_3$:' என்று மஹாப$_4$ாரதம் புகழ்பெற்றது போல் ஐந்தாம் மறை என்னும் படியான ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்த மாமுனிகள் குயிலினை ஒப்பர்.

மேலும், மாமுனிகள் பஞ்சமோபாயத்தை உணர்த்தி அருளியவர்.

ஸ்வைராலாபை$_4$: ஸுலப$_4$யஸி தத்பஞ்சமோபாயதத்த்வம்

(எறும்பியப்பாவின் வரவரமுனி ஶதகம் 11)

குயில் பரப்$_4$ருதம். மாமுனிகளும் பராபி$_4$மாநத்தில் (எம்பெருமானாரின் அபி$_4$மாநத்தில்) ஒதுங்கியவர்.